பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 25 திங்கட்கிழமை 07.02.2022 கதிர் 94

### இனி இது ரகசியம் அல்ல!

ஒவ்வொரு நாளும் அரசியலா? வேண்டாம். இன்று வேறு விடயத்தைப் பார்ப்போம்.

வெள்ளியன்று நடைபெற்ற சுதந்திர தின பவனியில் சென்ற ஊர்தி ஒன்று பற்றிய செய்தி சமூக ஊடகங்களில் பரவலாக உலாவியது. நண்பர் 2

### அமைச்சர் டக்ளஸுடன் முதல்வர் ஸ்டாலினின் பிரதிநிதி பேசியமையை அடுத்து

## கச்சதீவுத் திருவிழாவில் தமிழக பக்தர்களுக்கும் அனுமதி இரு தரப்பு மீனவரினதும் நட்புறவு நிகழ்வாக நடத்த முயற்சி!

கச்சதீவு திருவிழாவில் இந்திய பக்தர்கள் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதியளித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருவிழாவில் கலந்து கொள்ளும் இலங்கை - இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு இடையில கலந்துரையாடலை நடத்தி, இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்களினதும் எதிர்காலத்திற்கான ஆரோக்கியமான சூழலை உருவாக்குவது தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து பக்தர்கள் கலந்து கொள்வதற்கு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனுமதி வழங்குவதில்லை என்று ஏற்பாட்டு குழு தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், 08

# ஜெனிவாவுக்கு எழுதிய கடிதத்தில் '13' ஐ சம்பந்தன் மறந்தமை ஏன்?



### முரண்நகை நடவடிக்கைப் போக்கு என்று எள்ளி நகையாடுகிறார் தயான் ஜெயதிலக

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 47 உறுப்பு நாடுகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அதில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தாது பெருந் தவறிழைத்து விட்டார் என்று இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை மையப்படுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆறு தமிழ்க் கட்சிகளின் ஏழு தலைவர்கள் இணைந்து கடிதம் அனுப்பி சொற்ப நாள்களில் இவ்விதமாக சம்பந்தன் செயற்பட்டுள்ளமையானது முரண் நகையாக உள்ளது என்று அவர் விமர்சித்துள்ளார் 08



## புதுடெல்லி சென்ற பீரிஸ் மோடியையும் சந்திப்பார்




இந்தியாவுக்கு இரண்டு நாள் உத்தியோபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் புதுடெல்லி சென்றடைந்துள்ளார்.

அங்கு அவரை இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் 08

## குருந்தூர்மலையில் பிரித்ஓதல் நிகழ்வு!

முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் தொல்லியல் அகழ்வு இடம்பெற்று வரும் இடத்தில், அடாத்தாக அமைக்கப்பட்டு வரும் விகாரையில் 40 இற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் மற்றும் 08



## எரிபொருள் விலையை அதிகரித்தது ஐ.ஓ.ஸி.

நேற்று நள்ளிரவு முதல் லங்கா ஐ.ஓ.ஸி.(IOC) நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் 92 ரக பெற்றோலின் விலை 7 ரூபாவாலும், ஒரு லீற்றர் டீஸலின் விலை 3 ரூபாவாலும் அதிகரிக்கப்படுவதாக 08

## யாழ்.பல்கலையின் மாணவிகள் மோதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவிகள் இருவர் தாம் வாடகைக்குத் தங்கியுள்ள வீட்டில் நேற்று மதியம் மோதிக் கொண்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

அதில் காயமடைந்த மாணவி வைத்தியசாலையில் 08

## இம்முறையும் ஜெனிவா, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தனிக்கடிதம் அனுப்பத் தமிழ்க் கட்சிகள் தீர்மானம்?

### பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோருவது நோக்கமாம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு தமிழ்க் கட்சிகள் கடிதமொன்றை அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளன.

இந்தக் கடிதத்தை அனுப்புவது தொடர்பான மெய்நிகர் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரனிடம் கடிதத்தின் வரைவைத் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்துள்ளன.

தற்போதைய நிலையில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல். எவ்., தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன இக்கடிதத்தில் கையொப்பமிடுவதற்கு இணக்கம் கண்டுள்ளன.

அதேநேரம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணத்தில் கையொப்பமிட்ட ஆறு அரசியல் கட்சிகளையும் ஏழு தலைவர்களையும் இந்தக் கடிதத்திலும் உள்வாங்குவதற்கு அடுத்தகட்டமாக நடவடிக்கைகளை 08

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## தமிழர் தரப்பின் மேலும் 3 கடிதங்கள் ஜெனிவாவுக்கு அஞ்சலாகும் சாத்தியம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளுக்கு மேலும் மூன்று கடிதங்கள் தமிழ் அரசியல் மற்றும் சிவில் சமூகங்களிடத்திலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தற்போது செய்தி வெளியாகியுள்ளது..

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் 49 ஆவது கூட்டத்தொடர் வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில், 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், இலங்கையில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் அது சார்ந்த விவாதமும் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், கடந்த தடவை விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், ஸ்ரீகாந்தா 08

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் எனக்கும் அதை அனுப்பியிருந்தார் – அது குறித்து ஒரு குறிப்பு எழுதும்படியான குறிப்புடன்.

'யுத்தக் கதாநாயகர்கள்' என்று ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்த அந்த ஊர்தியின் வெளிப்புறத்தில் முப்படையினரின் படங்கள், யுத்த முனைக் காட்சிகளின் படங்கள் என்பன வெளியே பிரசித்தமாக இடம்பெற்றிருந்தன. அதிலே கனரக ஆயுதங்களுடன் நிற்கும் சீருடையினர் இருவரின் படமும் இருந்தது. அந்த இருவரும் புலிகளின் போராளிகள் என்று சமூக ஊடகங்களில் சிலர் குறிப்பிட்டு இருந்தனர்.

அப்படி அவர்கள் சுட்டுவது சரியாகவும் இருக்கலாம், பிழையாகவும் இருக்கலாம். அது குறித்து தீர்மானம் எடுக்கும் தேர்ந்த இராணுவ அறிவு எனக்கில்லை. அவர்கள் வைத்திருக்கும் அந்த ஆயுதம், அணிந்திருக்கும் சீருடை ரகம் குறித்தெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது.

ஆனாலும் இந்தச் சந்தேகம் எழுந்தபோது, எனக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற வேறு ஒரு சம்பவம் தொடர்பில் நான் எழுதிய ஒரு செய்திதான் நினைவுக்கு வந்தது. அதனை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

இது நடந்தது – என் நினைவு சரி என்றால் – 1991 ஜூலையில். அப்போது ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் முற்றுகைக்குள் கொண்டு வந்திருந்தனர். ஆனையிறவுக்குக் கிழக்கே கட்டைக்காட்டில் கடல்வழியே துருப்புக்களை இறக்கி, ஆனையிறவு வரை அனுப்பி, தனது படைகளை அப்போதைய முற்றுகையில் இருந்து காப்பாற்றியது அரச இராணுவம். ஒரு மாதம் தாண்டியும் நீடித்த இந்த முற்றுகைப் போர் பற்றிய செய்திகளை துரிதமாகவும், விரைந்தும், மக்களுக்குத் தெம்பூட்டும் வகையிலும் வெளியிட்டமைக்காக யாரிடம் பாராட்டுப் பெற வேண்டுமோ அவரிடம் பாராட்டை நேரில் பெற்ற அனுபவம் எனக்குண்டு. அதுவல்ல இங்கு விடயம். அப்போது நடைபெற்ற பிறிதொரு சம்பவம்தான் கவனிக்கப்பட வேண்டியது.

கட்டைக்காட்டில் மீட்பு அணியாக வந்திறங்கிய அரசு படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் போர் மூண்டது. அவர்களை ஆனையிறவு முகாம் நோக்கி முன்னேற விடாது புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

அச்சமயத்தில் யுத்த முனையில் இருந்து ஒரு மூன்று, நான்கு கிலோ மீட்டர் தூரம் வரை மோட்டார் சைக்கிளில் நேரடியாகச் சென்று செய்தி சேகரித்து வருவோம். அப்போது நானும் இளைஞன். சற்று துணிச்சலும் இருந்தது. திருமணம் செய்யாததால் இன்னும் துணிச்சல் சற்று அதிகம் என்பேன்.

பெரும்பாலும் இரவில் சண்டை தீவிரம் பெறும். காயமடையும் போராளிகளை யாழ். ஆஸ்பத்திரிக்கு அள்ளிக் கொண்டு வருவர். உடனடி சிகிச்சைகளை விரைந்து வழங்குவர். இப்படிக் காயப்பட்டு வரும் போராளிகள் ஒவ்வொருவருக்கும் ஆஸ்பத்திரியில் துணைக்கு ஆளுக்கு ஒருவர் பக்கத்தில் இரவு பகலாக நிற்க வேண்டும். உதவிக்கு நிற்க அபிமானம் மிக்க பொதுமக்கள் தாமாக முண்டியடித்து வருவர். அது பற்றிய தேவைகள், தகவல்களை மக்களுக்குப் பரிமாறி, அவர்களைத் திரட்டும் பணியில் பத்திரிகைகளின் பங்கு கணிசமாக இருந்தது. சில சமயங்களில் போராளிகளின் கருத்தியலில் நாமும் செயற்பட வேண்டியிருக்கும். (எங்களை 'ஊடகப் போராளி' என்பது இதனால்தானோ?)

ஒரு நாள் இரவுச் சமரில் பல டசின் போராளிகளுக்குப் படுகாயம். அகப்பட்ட வாகனங்களில் அவர்களை அள்ளி வந்தார்கள். இரத்தமும் சதையுமாக அப்படி வந்தவர்களில் பலர் பேச்சு மூச்சின்றி மயங்கிக் கிடந்தனர். உடை முழுவதும் சேறும் சகதியும் இரத்தமும் தோய்ந்த நிலையில் ஆஜானுபாகுவான தோற்றத்தில், கன்னங்கரேலென்ற நிறத்தில், ஓர் இளைஞனும் அவர்களில் இருந்தார். மருத்துவர்கள், தாதியர்கள் விரைந்து செயற்பட்டனர். உடைகள் அகற்றப்பட்டன. காயம் ஏற்பட்ட இடமெல்லாம் மருந்து கட்டப்பட்டது. 'ஸேலைன்' ஏற்றப்பட்ட நிலையில் பேச்சிமூச்சின்றி மயங்கிக் கிடந்த அந்த இளைஞனுக்கு உதவியாக என் வீட்டுக்கு நெருக்கமான அயல் நண்பர் ஒருவரின் தம்பியார் பணியாற்றினார். அவர் மூலம்தான் விடயம் எனக்குத் தெரிய வந்தது. பின்னர்தான் அந்த விவகாரத்தை சுவைபட செய்தியாக்கினேன்.

காயப்பட்ட அந்த இளைஞனுக்கு இரண்டாம் நாள் சற்று உணர்வு வர அவர் உடல் வலியில் முனகத் தொடங்கினார். அவரது முனகலைக் கேட்டு, அவருக்கு உதவியாக நின்ற தம்பிக்கு அதிர்ச்சியோ அதிர்ச்சி!

'மகே...அம்மே...!' – என்று தொடங்கி உளறல் எல்லாம் சிங்களத்தில் இருந்தன. உதவிக்கு நின்ற தம்பி ஆஸ்பத்திரியில் புலிகளுக்குப் பொறுப்பான மருத்துவப் போராளியிடம் விரைந்து சென்று தகவலைச் சொன்னார். அதற்குப் பின்னர்தான் விடயத்தைத் தேடி ஆராய்ந்தார்கள். முதல் நாள் இரவில் காயப்பட்ட போராளிகளை அள்ளி வருகையில், காயப்பட்ட இராணுவச் சிப்பாயையும் புலிப் போராளி என்று கருதி அள்ளி வந்து வந்துவிட்டார்கள் என்பது புலனாகியது. அவ்வளவு தூரம் மிக நெருக்கமான நேரடிக் கைகலப்பு என்ற அளவில் – துவந்த யுத்தம் என்ற மாதிரி – சண்டை நடந்து இருக்கின்றது.

இந்த விடயத்தை மனதைத் தொடும் விதத்தில் நான் செய்தியாக்கினேன். அந்தப் படைச் சிப்பாயைப் புலிகள் மருத்துவ சிகிச்சை அளித்துக் காப்பாற்றினார்களா, அவருக்கு என்ன நடந்தது என்பவை குறித்து எனக்கு நினைவில் இல்லை. ஆனால் அப்படி ஒரு சிப்பாயைப் புலிகள் தமது போராளி என்று காப்பாற்றி வந்து, பின் அவருக்குச் சிகிச்சை அளித்தனர் என்பது மட்டும் எனக்கு நினைவில் உண்டு. அதற்குக் காரணமும் உள்ளது.

அப்படி சிகிச்சைக்குக் கொண்டு வரப்பட்ட படைச் சிப்பாய் கன்னங்கரேல் என்று ஆஜானுபாகு தோற்றத்தில் இருந்தார் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அப்போது எனது பத்திரிகையின் கிரிக்கெட் அணியில் அதேபோன்ற விஸ்வரூபத் தோற்றத்தில் – கருமை நிறத்தில் – ஆனால் ரொம்ப அழகிய முக வசீகரத்துடன் – முன்னணி வீரர் ஒருவர் இருந்தார். அவரது தந்தையார் யாழ்ப்பாணத்தில் பிரபல மதத்தலைவர். தாயார் பிரபல மகப்பேற்று மருத்துவர். உயர்ந்த, பருத்த, வலிமையான உடல் தோற்றம் கொண்ட அவரின் கால் அளவுக்குரிய சப்பாத்து யாழ்ப்பாணத்தில் இலகுவில் வாங்க முடியாது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அவர் மைதானத்துக்குள் இறங்கும்போது, மேற்படி என் செய்தியை வாசித்த ரசிகர்கள் 'கட்டைக்காடு', 'கட்டைக்காடு' என்று கத்துவார்கள். ஆரம்பத்தில் எனக்கு விளங்கவில்லை. விசாரித்து அறிந்ததில் சிரிப்பாக இருந்தது. கட்டைக்காட்டில் காயமுற்று மயங்கிய நிலையில், தவறுதலாகப் புலிப்போராளி என மீட்கப்பட்ட அந்த ஆஜானுபாகுவான படைச் சிப்பாய்போல நம் நண்பர் இருக்கின்றமையால் கிரிக்கெட் ரசிகர்கள் அவருக்கு 'கட்டைக்காடு' என்றே பெயர் வைத்துவிட்டனர். நான் கிரிக்கெட் மைதானத்தில் இறங்கும் சமயமெல்லாம் அப்போது என்னுடன் களத்தில் இறங்கும் அவருக்கு ரசிகர்கள் சூட்டிய பெயர் அடிக்கடி மனதில் பதிந்து, அந்தக் கட்டைக்காடு மீட்புச் சம்பவம் என் மனதில் நிரந்தரமாக இடம் பிடித்து விட்டது.

சரி, இந்த விடயத்தை நான் ஏன் இப்போது இங்கு குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கும் காரணம் உண்டு.

நேரிலேயே படைச் சிப்பாயைப் புலிகள் தமது போராளி என்று கருதித் தாமே சுமந்து வந்து சிகிச்சை அளிக்கும்போது, இவர்கள் படத்தில் அப்படி மாறி பிரசுரித்து விடுவது அப்படி ஒன்றும் பெரிய தப்பில்லைத் தானே....! அதனால்தான் குறிப்பிட்டேன்.

★ ★ ★

இன்னொரு விடயம் பற்றியும் விரிவாக எழுத வேண்டும். முடியுமானால் நாளை பார்ப்போம். அது ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தை ஒட்டி தமிழ் அரசியல் கட்சிகள் இடையே கடிதச் சமா தொடங்கிவிட்டது. அது பற்றிய விவரத்தை முடியுமானால் நாளை பார்ப்போம்.

– மின்னல் –

# தமிழகத்தில் இலங்கை பெண்ணுக்கு நாடு திரும்பக் கிடைத்தது அனுமதி!

தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண்ணுக்கு நாடு திரும்ப அனுமதி வழங்கி, சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 16 வயது பெண் ஒருவர், உரிய அனுமதியுடன் கடந்த 2018 ஏப்ரல் 17 ஆம் திகதி தமிழகத்துக்கு சுற்றுலா சென்ற நிலையில், அனுமதி காலம் முடிவடைந்து அவர் இலங்கைக்குத் திரும்பாத காரணத்தால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்ட குறித்த பெண், நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கில், ராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றம், 56 நாள்களின் பின்னர் குறித்த பெண்ணுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டபோதும், சென்னை – புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் விடுக்கப்படாத காரணத்தால் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவின் பேரில், கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இதனையடுத்து, உறவினர் வீட்டில் தங்கியிருந்த குறித்த பெண், இலங்கைக்குச் செல்ல அனுமதி வழங்கக்கோரி உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, தாம் விடுவிக்கப்பட்ட பின்னரும், பொலிஸ் நடவடிக்கைகள் காரணமாக, சொந்த நாட்டுக்குச் செல்ல அதிகாரிகளால் அனுமதி மறுக்கப்படுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொலிஸாரின் நடவடிக்கைகளை இரத்துச் செய்து, சொந்த நாட்டுக்குச் செல்ல தம்மை அனுமதிக்கவேண்டும் என மனுதாரர் கோரியுள்ளார்.

இதனைப் பதிவு செய்த நீதிபதி, விதிகளை மீறி தங்கியிருந்தமைக்கான அதிகபட்ச தண்டனை ஓராண்டு காலம் மட்டுமேயாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், மனுதாரர் 100 நாள்கள் சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டார். இதுவே, அவருக்கு அதிகபட்ச தண்டனை என்பதால், பொலிஸாரின் அனைத்து நடவடிக்கைகளும் இரத்துச் செய்யப்படுகின்றன.

அத்துடன், மனுதாரர் இலங்கை செல்வதற்காக, வெளிநாட்டவர்களுக்கான மண்டலப் பதிவு அலுவலர் உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

# தங்கத்தின் விலை மாற்றமேதுமில்லை!

கடந்த சில நாள்களாக தங்கம் விலை பெரியளவில் மாற்றமின்றி தொடர்ந்து ஏற்ற இறக்கத்தில் இருந்து வருகின்றது.

இது இன்னும் முதலீட்டாளர்களுக்கு தங்கத்தை வாங்க சரியான வாய்ப்பாகவே பார்க்கப்படுகின்றதாக நிபுணர்கள் கணித்துள்ளனர்.

குறிப்பாக வார இறுதியில் முதலீட்டாளர்கள் புராபிட் செய்ததன் காரணமாக பெரியளவில் தங்கத்தின் விலையில் மாற்றம் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

தங்கம் விலை குறையும்போதும் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் வாங்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் மத்திய வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி என்பன வட்டி விகிதத்தை அதிகரிக்கலாம். அப்படி அதிகரிக்கும் பட்சத்தில் டொலரின் மதிப்பு உச்சத்தை எட்டலாம்.

இதன் காரணமாக பாதுகாப்பு புகலிடமான தங்கம் விலை அழுத்தத்தைக் காணலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய, தங்கம் விலை விரைவில் 1900 – 1910 டொலர்களை தொடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



# பருப்புக்காக ஆஸியிடம் 20 கோடி டொலர் கடன்

## வர்த்தக அமைச்சர் பந்துல தகவல்



இலங்கை, ஆஸ்திரேலியாவிடம் 20 கோடி டொலர் கடன் வசதியை கோரியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தக் கடனைப் பயன்படுத்தி பிரதானமாக பருப்பு மற்றும் பார்லி ஆகியவற்றை இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மீதமுள்ள பணத்தில் ஏனைய அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆஸ்திரேலியாவில் இருந்தே பருப்பு மற்றும் பார்லி இறக்குமதி செய்யப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் புத்தாண்டு காலம் மற்றும் அடுத்து வரும் மாதங்களுக்கு நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து 100 கோடி டொலர் கடன் உதவி கிடைக்க உள்ளது.

இந்த தொகை அடுத்த ஆறு மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய போதுமானதாக இருக்கும்.

இதனைத் தவிர சீனாவிடம் 10 லட்சம் மெற்றிக் தொன் அரிசியை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருளுக்கு முற்பணம் கோரும் விநியோகஸ்தர்கள்

இலங்கைக்கு எரிபொருளை விநியோகிக்கும் விநியோகஸ்தர்கள் முற்பணத்தை செலுத்துமாறு கோர ஆரம்பித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதுவரை எரிபொருளை விநியோகித்த பின்னர் பணத்தை வழங்கும் வங்கி கடன் பத்திரத்தின் அடிப்படையில் விநியோகித்து வந்த விநியோகஸ்தர்கள், இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடு காரணமாக முற்பணத்தைச் செலுத்துமாறு கோரி வருகின்றனர்.

இலங்கைக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய 40 முதல் 50 கோடி டொலர் வரை தேவைப்படுகிறது.

இதனிடையே சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குத் தேவையான மசகு எண்ணெயை ஓமான் நிறுவனம் ஒன்றிடம் இருந்து கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அந்த ஓமான் நிறுவனம் விலைமனுவை முன்வைத்த நிறுவனம் அல்ல எனத் தெரியவருகிறது.

எனினும் ஆறு மாத கால கடன் அடிப்படையில் இந்த விலை மனு அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எரிபொருளை ஏற்றி வரும் கப்பல்களுக்கு கட்டணத்தை செலுத்துவது நாள் கணக்கில் தாமதமாகி வருகின்றமையால், விநியோகஸ்தர்கள் இலங்கைக்கு எரிபொருளை விநியோகிப்பதில் அக்கறை காட்டுவதில்லை எனவும் தகவல்கள் கூறுகின்றன.

# நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண சர்வகட்சி மாநாட்டை நடத்துக!

## சுதந்திரக் கட்சி கோரிக்கை

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்தும் தாமதிக்காது நடத்துவது சம்பந்தமாக கலந்துரையாடவும் நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு தீர்வு காணவும் சர்வகட்சி மாநாட்டை நடத்துமாறு அரசாங்கத்தின் பிரதான கூட்டணிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற லங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் போது 15 தீர்மானங்களை அகில இலங்கை செயற்குழு நிறைவேற்றியுள்ளது. மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்காகத் தாமதமின்றி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அதில் ஒரு தீர்மானமாகும்.

அரசியல் பேதங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்து விட்டு, சர்வகட்சி மாநாட்டை நடத்தி நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு நெருக்கடிகள் சம்பந்தமாகக் கலந்துரையாடி அவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்காக அனைத்து கட்சிகளும் அடங்கிய குழுவை நியமிக்க வேண்டும். இந்த குழு ஒரு கால வரையறைக்குள் செயற்பட்டு, நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குக் குறுகிய மற்றும் மத்திய கால தீர்வுகளை உருவாக்க வேண்டும் எனவும் சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழு கோரியுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கொவிட்-19 தொற்று காரணம் அல்ல. இதனால், பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு.

சட்டத்தின் ஆளுமை தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கவும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கையின் மதிப்பை அதிகரிக்கவும் நாட்டின் பல பிரதேசங்களில் நடக்கும் ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுதந்திரக் கட்சி யோசனை முன்வைத்துள்ளது.

# தெஹிவளை இளைஞன் கத்திக் குத்துக்கு பலி!

கொழும்பின் புறநகர் தெஹிவளையில் 18 வயதான இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு மரணமானார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. காயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே அவர் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணமானவர், தெஹிவளை பிரதேசத்தை சேர்ந்தவராவார். முரண்பாடு ஒன்றின் காரணமாகவே அவர் கொலை செய்யப்பட்டார் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் கொலை சந்தேக நபர் பிரதேசத்தில் இருந்து தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாடு முழுவதும் கூட்டங்களை நடத்த பொதுஜன பெரமுன கட்சி தீர்மானம்!

கொழும்பு, பெப்ரவரி. 07

நாடு முழுவதும் தொடர் கூட்டங்களை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

இதன்படி, முதலாவது கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அநுராதபுரம் சல்காடு விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் பல ஆளுங்கட்சி அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.



அரசாங்கத்தின் அரசியல் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்துவதற்காக இந்த கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈஸ்டர் குற்றவாளிகளை அரசு பாதுகாக்கின்றது!


## ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த சந்தேகம்

ஈஸ்டர் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்காத நபர்களை தற்போதைய அரசாங்கம் பாதுகாத்து வருகிறதோ என்ற சந்தேகம் தனது மனசாட்சிக்கு அமைய இருப்பதாக ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

புத்தளம் மஹகும்புக்கடவல பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இந்த நிகழ்வில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கலந்துகொண்டார்.

எமது கர்தினால் முதுகெலும்புள்ள தலைவர். அவரது வார்த்தைகள் சிலருக்கு எரிச்சலை ஏற்படுத்தலாம். ஏற்படுத்தாமலும் இருக்கலாம். அவர் முன்வைக்கும் விடயங்களில் உண்மை உள்ளது.

நானும் ஒரு நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றேன். ஈஸ்டர் தாக்குதல் நடந்த போது தகவல்களை மறைத்தனர், மக்களைப் பாதுகாக்கத் தவறினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள அன்றைய பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் சிறையில் இருக்க வேண்டும்.



அந்த காலக்கட்டத்தில் முப்படை தளபதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்தார். அவரை அழைத்து வாக்குமூலம் ஒன்றைக் கூட பெறவில்லை என்றால், அரசாங்கம் அவர்களைப் பாதுகாக்கின்றதோ என்ற சந்தேகம் கத்தோலிக்கன் என்ற முறையில் எனது மனசாட்சிக்கு இருக்கின்றது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. எமது இந்த இரண்டு தலைவர்களும் தமது மனசாட்சியிடம் கேட்டுப் பார்த்தால் நல்லது என சனத் நிஷாந்த குறிப்பிட்டுள்ளார்.

# பள்ளிவாசல் ஒன்றில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை

சிலாபம் தும்மலசூரிய யகம்வெல பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை பிற்பகல் தொழுகைக்கு வந்தவர்களிடம் மௌலவி ஒருவருக்கு செலுத்துவதற்காக பணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள பாடசாலை தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் ஒன்று ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாக்குவாதம் மோதலாக மாறிய நிலையில், தாக்குதலில் இருவர் காயமடைந்து குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பள்ளிவாசல் நிர்வாகம் தொடர்பாக அவ்வப்போது ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக சிலாபம் பிரிவுக்குப் பொறுப்பான தும்மலசூரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# திருகோணமலையில் மின்சாரம் தாக்கி காட்டு யானை உயிரிழப்பு



திருகோணமலை – கந்தளாய், கிதுலூத்துவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி காட்டு யானையொன்று உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த யானை 15 முதல் 20 வயது கொண்டதாக இருக்கலாம் எனவும், கால்நடை வைத்தியரின் தலையீட்டில் யானையின் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் வனஜீவராசி அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

யானை உயிரிழந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கித்துல் ஊத்துவ பிரதேசத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புதிய உலக ஒழுங்குக்குக் கட்டியம்

உலகம் மாறிக் கொண்டே இருக்கின்றது. உலகில் மாற்றம் ஒன்றே மாறாதது என்பர்.

உலக ஒழுங்கும் கூட காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே இருக்கின்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கிழக்கு, மேற்காக – முதலாளித்துவம், கம்யூனிஸம் என – பிரிந்து நின்ற உலக ஒழுங்கு மாறி விட்டது. அமெரிக்கா தலைமையிலும், சோவியத் ஒன்றியத்தின் தலைமையிலும் பிரிந்து கிடந்த பனிப்போர் கால உலக ஒழுங்கும் சோவியத் ஒன்றியத்தின் சிதைவுடன் மாறிவிட்டது.

இப்போதும் புதிய உலக ஒழுங்கு ஒன்றிற்கு வாசல் திறந்து விடப்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

சோவியத் ஒன்றியம் சிதறுண்ட போதும், அதன் மையமாகத் தொடர்ந்து நின்று பிடிக்கும் ரஷ்யாவுக்கும், சிதறுண்டு போய் அமெரிக்காவுடன் கைகோர்த்து நிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான இராஜதந்திர உரசல் – முரண்பாடு – நெருக்கடி – புதிய உலக ஒழுங்குக்கான திரும்பல் ஒன்றுக்குக் கட்டியம் கூறும் நிகழ்வாகக் கட்டவிழ்ந்திருக்கின்றது.

ரஷ்யாவின் எல்லைப் புறத்தில் இருக்கும் அதன் சோவியத் ஒன்றிய கால தோழமைக் குடியரசான உக்ரைன் இப்போது அமெரிக்கக் கைப்பொம்மை. நோட்டோ நாடுகளின் உறுப்பு நாடு போல உக்ரைன் மாறுவது தனது பாதுகாப்புக்கு மிக ஆபத்தானது என ரஷ்யா கருதுகின்றது. அதனால் எல்லைப் புறத்தில் லட்சக்கணக்கான துருப்புக்களைக் குவித்துள்ளது ரஷ்யா.

உக்ரைனுக்குள் ரஷ்யா ஆக்கிரமிப்பு நகர்வை முன்னெடுத்தால் சேர்ந்து பதிலடி கொடுக்க அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தயார் என்ற நிலைமை.

எல்லையில் போர்ப் பதற்றம் உச்சத்தைத் தொட்டிருக்கும் இந்தச் சமயத்தில்தான், ரஷ்ய அதிபர் புடின், சீனாவுக்கு விஜயம் செய்து பெய்ஜிங்கில் சீன அதிபர் ஜின்பிங்கை நேரில் சந்தித்துப் பேசியிருக்கின்றார். சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி ஆரம்பமான நிலையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் பிரச்சினை ஆரம்பமான பின்னர் – கடந்த இரண்டு வருடங்களில் – சீனத் தலைவர், நேரடியாக சந்திக்கும் முதல் வெளிநாட்டுத் தலைவர் ரஷ்ய அதிபர் புடின்தான்.

கொரோனாப் பரவல் ஏற்பட்ட பின், எந்த வெளிநாட்டுத் தலைவரும் சீனாவுக்கு வரவுமில்லை. சீனத் தலைவர் நாட்டுக்கு வெளியே செல்லவுமில்லை.

இந்தச் சூழ்நிலையில் இரண்டு வல்லரசுகளின் தலைவர்கள் இப்படிச் சந்திப்பது, புதிய உலக ஒழுங்குக்கு வழி கோலலாம் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மற்றொரு வல்லரசான அமெரிக்கா தன் பக்கத்தில் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற பிற வல்லரசுகளைச் சேர்ந்துக் கொண்டு மிகப் பாதுகாப்பான கூட்டமைப்பாக தன்னை மாற்றி வருகின்றது.

அந்த மேற்குலகுக் கூட்டு அதற்கு மாறான சீனா, ரஷ்யா போன்ற தரப்புகளுக்கு எதிராகக் கனகாத்திரமான – கட்டமைப்பு ரீதியான – சக்தியாக எழுச்சி கண்டு வருகையில் –

இந்த மேற்குலக எழுச்சியின் சவாலைத் தனித்தனியாக எதிர்கொண்டு வரும் சீனாவும், ரஷ்யாவும் அந்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுப்பதற்கு ஒன்றிணைந்துச் செயற்படக் கூடிய வாய்ப்பை இந்தச் சந்திப்பு ஏற்படுத்தும் களநிலைகள் உள்ளன.

அப்படி மேற்குலகுக்கு சவால் விடும் வகையில் சீனா, ரஷ்யா போன்றவை ஒன்றித்து செயற்பட நேர்ந்தால், அடுத்த கட்ட உலக ஒழுங்கு ஒன்று மாற்றத்துடன் நடைமுறைக்கு வரக் கூடிய ஏது நிலைகள் உள்ளன.

## பேச்சுக்கு வர முடியாதவர்களுக்கு தீர்வை எப்படி எம்மால் வழங்கலாம்?

### நீதி அமைச்சர் அலி சப்ரி இப்படி கருத்து



வடக்கில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களில் போராட்டங்களை நடத்திய குறிப்பிட்ட குழுவினருடன் பேச்சு செய்வதற்கு நான் தயாராகி அவர்களை அழைத்தபோது அவர்கள் வரவில்லை. அவ்விதமானவர்களுக்கு எவ்வாறு தீர்வை வழங்குவது என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் நீதி அமைச்சு எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை மையமாகவைத்து எவ்விதமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கில் நீதிக்கான அணுகல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதைப் போன்று அடுத்தகட்டமாக கிழக்கிலும் பின்னர் தெற்கிலும் மலையகத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

அவை இந்த ஆண்டில் முன்னெடுப்பதற்கு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நீதி அமைச்சின் நீதிக்கான அணுகல் வேலைத்திட்டம் எதிர்வரும் கூட்டத்தொடரில் ஜெனிவாவை சமாளிப்பதற்கும் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்குமாக முன்னெடுக்கப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரி பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு –

நீதிக்கான அணுகல் வேலைத்திட்டமான நீதி அமைச்சால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டதொரு விடயமாகும். வடக்கு போரால் பதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு பல்வேறுபட்ட நீதித்துறை சார்ந்த பிரச்சினைகள் ஏனைய மாகாணங்களை விடவும் அதிகமாகக் காணப்படுகின்றன என்ற அடிப்படையில் தான் வடக்கு மாகாணத்தில் முதலில் இந்தத் திட்டத்தை செயற்படுத்துவது என்று தீர்மாகிக்கப்பட்டது.

மேலும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பணியகம், இழப்பீட்டுக்கான பணியகம், தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் ஆகிய கட்டமைப்புக்கள் எனது அமைச்சின் அதிகாரத்திற்கு உட்பட்ட விடயமாகும்.

ஆகவே, அந்த மூன்று கட்டமைப்புக்களும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுடன் தொடர்புடையவை. அந்த அடிப்படையில் தான் வடக்கிற்கான விஜயத்தை நான் உள்ளிட்ட எனது அமைச்சின் அதிகாரிகள் முன்னெடுத்திருந்தார்கள்.

இந்நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களில் ஒரு பகுதியினர் அங்கு போராட்டங்களை முன்னெடுத்திருந்தார்கள். அவர்களை நான் பேச்சுக்கு வருமாறு அழைத்திருந்தேன். ஆனால் அவர்கள் வருவதற்கு மறுத்து விட்டார்கள். பேச்சுக்கே வருவதற்கு மறுப்பவர்களுக்கு எவ்விதமாக தீரவை வழங்குவது?

நான், நீதி அமைச்சர் பதவியை வைத்துக்கொண்டு அரசியல் செய்யவில்லை. நான் எனக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வடக்கோ, கிழக்கோ, தெற்கோ மக்களுக்கு என்னாலான நன்மையான விடயங்களை செய்வதற்கே முயற்சிக்கின்றேன்.

அந்தவகையில் தான் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டுத்தொகையை வழங்குவதற்கு முயற்சிகளை எடுத்திருந்தேன். அவர்களின் நீண்டகாலமாக போராடிக்கொண்டிருப்பதை நான் அறிந்துள்ளேன். அதனால் அவர்கள் மீது எனக்குக் கரிசனை உள்ளது. மேலும் அவர்களின் போராட்டம் நியாயமானது. ஜனநாயக ரீதியாக அவர்கள் போராடத் தகுதி உடையவர்கள்.

ஆனால் அவர்களின் அன்றாட வாழ்க்கை, எதிர்காலம் தொடர்பாக நான் கருத்திற்கொள்கின்றேன். அந்த அடிப்படையில் தலா ஒரு லட்சம் ரூபா படி குடும்பங்ளுக்கு வழங்க முயற்சித்தேன். ஆனால் ஒருசிலதரப்புக்கள் அதனை குழப்புவதற்கு முயற்சித்தன.

இருப்பினும் முதற்கட்ட முயற்சியில் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் ஆயிரம்பேருக்கு நூறு மில்லின் ரூபா வழங்கப்பட்டுள்ளன. இதனை விடவும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், யாழ்.பல்கலை சட்டபீட மாணவர்கள் உள்ளிட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன்.

தேசிய ஒருமைப்பாட்டை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் முதலில் அப்பணியை வடக்கில் இருந்து தான் ஆரம்பிக்க வேண்டும். அதனையே தான் நான் முன்னெடுத்துள்ளேன். மேலும் கொக்குவில் இந்துக்கல்லூரிருக்கு ஒருவருடத்துக்கு முன் திட்டமிட்டு 42 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தேன்.

ஆகவே, இவையெல்லாம் ஜெனிவாவை மையப்படுத்தி செயற்பட்ட விடயங்கள் என்று கூறுகின்றமை பொய்யானதொரு விடயமாகும். அரசியல் ஆதாயம் தேட விளைபவர்களே இவ்விதமான கருத்துக்களை மக்கள் மத்தியில் கூறுகின்றார்கள்.

நான் தற்போதும் பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட வடக்கு, கிழக்கு என்று எந்த வித்தியாசமும் இல்லாது யாருடனும் பேச்சுகளை முன்னெடுக்கவும் இயலுமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவும் முயற்சிகளை எடுப்பதற்குத் தயாராகவே உள்ளேன். – என்றார்.

## பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டத்துக்கு தீர்மானம்!

### சுமந்திரன் எம்.பி.அறிவிப்பு

பயங்கரவாததடைச்சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் கையெழுத்து போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மையில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

எவ்வாறாயினும் பயங்கரவாத திருத்தச் சட்டத்தில் எந்த சீர்திருத்தமும் இடம்பெறவில்லையென கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தநிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் கையெழுத்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## வெள்ளவத்தை கடற்கரையில் மீட்கப்பட்ட சடலம் காணாமல்போன மாலைதீவை சேர்ந்தவருடையது

வெள்ளவத்தை கடற்கரையில் கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்ட இரண்டு சடலங்களில் ஒரு சடலம் தொடர்பில் மேலதிக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சடலம், காணாமல் போன மாலைதீவைச் சேர்ந்தவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளையில் வசித்து வந்த 24 வயதுடைய இளைஞன் வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளார் என மாலைதீவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் வெள்ளவத்தை பகுதியில் சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்ட இரு சடலங்களில் ஒன்று மாலைதீவு பிரஜையுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மற்றைய சடலத்தை இதுவரை பொலிஸார் அடையாளம் காணாத நிலையில், இது தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அபிவிருத்திகள் என்ற பெயரில் மலையகத்தில் காணி கொள்ளை

## பழனி திகாம்பரம் காட்டம்



மலையகப்பகுதிகளில் அபிவிருத்திகள் என்ற பெயரில் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. இவ்வாறு தொடர்ந்தும் காணி சுவீகரிப்புக்கள் இடம்பெற்றால் எதிர்காலத்தில் தோட்டப்பகுதிகள் முழுமையாக இல்லாமல் போகும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பசறை – கோணகல தோட்டப்பகுதியில் கட்டடமொன்றுக்காக அடிக்கல் நாட்டுவதற்காக பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பகுதிக்கு விஜயம் செய்துள்ளார். அந்த பகுதியில் சுமார் 50 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களை வெளியேறச் செய்து , அங்கு கட்டடத்தை அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு அப்பகுதியில் வசிக்கும் மக்களை எவரையும் அவ்வாறு வெளியேற்ற முடியாது. அவர்களை வெளியேற்றுவதாயின் வீடுகளை அமைத்துக் கொடுத்து , அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பின்னரே அதனை செய்ய முடியும். இதற்கு அப்பகுதி வாழ் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இதன் போது அப்பகுதியின் பிரதேசசபை உறுப்பினர் கண்ணன் அங்கு சென்று நிலைமையை ஆராய்ந்த போது , குறித்த நாடாளுமன்ற உறுப்பினரால் அவர் தாக்குதலுக்கு உள்ளாகி பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வாறு யார் மீதும் தாக்குதல்களை மேற்கொள்ள முடியாது. அவர் ஏதேனும் தவறிழைத்திருந்தால் பொலிஸாரிடம் முறையிட்டிருக்கலாம்.

எனவே, துரித விசாரணைகளை முன்னெடுத்து தாக்குதல் நடத்தியவரை கைதுசெய்ய வேண்டும் என்று பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கின் றோம். அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு இவ்வாறான அடாவடி செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. ஒரே நாடு – ஒரே சட்டம் என்று கூறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அரசாங்கத்திற்கு ஒரு சட்டமும் எதிர்க் கட்சிக்கு ஒரு சட்டமுமே நடை முறைப்படுத்தப் படுகிறது.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் இவ்வாறு செய்திருந்தால் உடனடியாக அவரை கைது செய்திருப்பர். மலையக அபிவிருத்திகள் என்ற பெயரில் சிலர் காணிகளை சுவீகரிக்கின்றனர்.

இவ்வாறு காணிகள் சுவீகரிக்கப்பட்டால் எதிர்காலத்தில் தோட்டங்களே இல்லாமல் போகும். மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போகும். எனவே, இந்த நடவடிக்கையை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். – என்றார்.

# அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பந்கு முயந்சி எடுத்துள்ளோம்

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு



அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க முயற்சி எடுத்துள்ளதாக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நல்லாட்சி காலத்தில் எத்தனை அரசியல் கைதிகளை விடுவித்தார்கள். எனினும் தற்போதைய ஜனாதிபதி பொறுப்பேற்றவுடன் அரசியல் கைதிகளின் விடுதலை இடம் பெற்றுள்ளது.


அது மாத்திரமின்றி அரசியல் நோக்கத்துக்காக கைது செய்யப் பட்ட அனைவரையும் விரைவாக விடுதலை செய்வதற்கான முனைப்பை சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் பேசி தொடர் முயற்சிகளை எடுத்துள்ளோம்.

அத்துடன் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும் அவ்வப்போது விளக்கம் கொடுத்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்யலாம் என்ற முழு நம்பிக்கையில் இருக்கின்றோம்.

இந்தியாவில் இருந்து வரும் மீனவர்கள் எமது மீனவர்கள் பாதிக்கும் வண்ணம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர். எனவே, இரண்டு நாடுகளுக்கிடையில் முரண்பாடு வராத வகையில் ஒரே மொழி பேசும் சமூகம் என்பதை உணர்ந்து இந்தியாவில் இருந்து வரும் மீனவர்கள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்காத வகையில் அவர்களது எல்லையில் இருந்து மீன்களைப் பிடிக்க வேண்டும் என்பதை ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி விவகாரத்தை சுயலாப அரசியலுக்கு பயன்படுத்துவதை நிறுத்துக!

## சாணக்கியன் வலியுறுத்து



திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக சுயாதீனமான முறையில் பக்கசார்பின்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இரா.சாணக்கியனின் பெயரை பயன்படுத்தி குறித்த விடயம் தொடர்பாக பகிரப்பட்டு வரும் கருத்துக்கள் பற்றி சனிக்கிழமை ஊடகங்களுக்குத் தெளிவு படுத்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

இதன்போது கருத்து வெளி யிட்டுள்ள அவர் –

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் எழுந்துள்ள 'ஹபாயா' சர்ச்சை பற்றிய உண்மைத் தன்மை தொடர்பாக சரிவர தெரியாமையாலேயே நான் அது பற்றி இதுவரை பேசாமல் இருந்தேன்.

எனினும் எனது பெயரைப் பயன்படுத்தி சில விசமிகள் இனங்களுக்கிடையில் பிரிவினையை வெளியிடும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இதன்காரணமாகவே நான் தற்போது இது தொடர்பாகச் சில கருத்துக்களை வெளியிட விரும் புகின்றேன்.

இது பற்றி சுயாதீனமான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன், பெரும் சர்ச்சையாகியுள்ள ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி விவகாரத்தை சுயலாப அரசியலுக்காகப் பயன்படுத்துவதைக் கைவிட வேண்டும். இவ்வாறான பிரச்சனைகள் இரு சமூக இணைப்பாட்டுடன் தீர விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.' – எனத் தெரித்துள்ளார்.

# சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்றவர் கட்டுநாயக்கவில் கைது

சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்ல முற்பட்ட இளைஞன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி ஆவணங்களைத் தயாரித்து சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாலிக்கான போலி வதிவிட வீசாவைப் பயன்படுத்தி டோஹா ஊடாக இத்தாலி செல்ல முற்பட்ட போதே, குறித்த இளைஞன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் எல்லை கண்காணிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சிலாபம்பகுதியைசேர்ந்த 22 வயதான இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கட்டார் விமான சேவைக்கு சொந்தமான கியுஆர் 655 என்ற விமானத்தில் பயணிப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

அவர் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு பிரிவிற்கு சென்று, அங்கு கடமை யில் ஈடுபட்டிருந்த குடிவரவு – குடியகல்வு அதிகாரியிடம் அதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில் இத்தாலிக்கான வதிவிட வீசா சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்டமையால் குறித்த அதிகாரி அதனை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளார்.

# இலங்கை மின்சார சபைக்கு 200 கோடி ரூபா மேலதிக செலவு

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் மின்சார பிரச்சினை காரணமாக இலங்கை மின்சாரசபைக்கு சுமார் 200 கோடி ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது. இந்த மேலதிக செலவு கடந்த டிசெம்பர் மாதம் நடுப்பகுதியில் இருந்து ஜனவரி ஆரம்பம் வரையிலாகும்.

எதிர்பார்த்த அளவைவிட அதிக டீசல் மற்றும் அனல் மின் நிலையங்களில் அதிக மின் உற்பத்தி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதே இதற்குக் காரணமாகும் என இலங்கை மின்சார சபை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சாதாரணமாக ஒவ்வொரு வருடமும் முதல் 4 மாதங்களில் நீர் மின் உற்பத்தி குறைவடைந்து அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி அதிகளவில் மேற்கொள்னப்படுகின்றது. இருந்தபோதும் இம்முறை பிரச்சினை தீவிரமாவதற்குக் காரணம் நுரைச்சோலை அனல் மின் நிலையம் செயலிழந்தமையாகும். அதன் பிரகாரம் சாதாரணமாக 3, 4 மணித்தியாலங்களில் செயற்பட்டு அதிக செலவு செய்யவேண்டி வந்த இலங்கை மின்சார சபை, இம்முறை 15 முதல் 18 மணித்தியாலங்கள் செயற்படவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன் மின் தேவைப்பாடு குறைவான இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரையான காலத்துக்குள் இவ்வாறான மின் உற்பத்தி நிலையங்கள் செயற்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டதாலே இலங்கை மின்சார சபைக்கு மேலதிக செலவைச் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று உராய்வு நீக்கி எண்ணெய்யை பயன்படுத்தி செயற்படும் சில மின் நிலையங்கள் டீசலைப் பயன்டுத்தி இருக்கின்றன.

மேலும் நிலக்கரி மின் நிலையம் இல்லாமை காரணமாக அதன் மின் உற்பத்தியை பூர்த்தி செய்து கொள்ள நீரை பயன்படுத்தியதனால், நீர் மின் நிலையங்களில் நீரின் அளவு தற்போது குறைவடைந்து செல்கின்றது. இதுதொடர்பாக மின்சாரவையின் ஊடக பேச்சாளர் என்ட்று நவமுனி குறிப்பிடுகையில் –

அனல் மின் நிலையம் மற்றும் டீசல் மின் நிலையங்கள் பாரியளவில் செயற்பட்டதால் இலங்கை மின்சார சபைக்கு மேலதி செலவொன்றை ஏற்றுக்கொள்ளவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் தொடர்ந்து ஏற்பட்டுவந்த மின்சார பிரச்சிளை, இதுவரை முடிவடையவில்லை.

இவ்வாறான பின்னணியிலேயே நாட்டில் பல பிரதேசங்களில் கடந்த வியாழக்கிழமை சுமார் 45நிமிடங்கள் மின் துண்டிக்கப்பட்டிருந்தது.

அடுத்து வரும் நாள்களிலும் மின் துண்டிப்பு ஏற்படுமா இல்லையா என உறுதியாகத் தெரிவிக்க முடியாது.

மின் துண்டிப்பு மேற்கொள்வதாக இருந்தால் முன்கூட்டியே அதுதொடர்பாக அறிவிக்கப்படும். – என்றார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 274

**695.அவை எப்படியானவை?**

1972 இல் விநோதன் சட்டக்கல்லூரியில் மாணவன். உடுவில் பிரதேசத்துக்கு சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர். சட்டக்கல்லூரியில் அமிர்தலிங்கம், தர்மலிங்கம் என்போரது முயற்சியினால் தமிழ்ச் சங்கம் அமைத்திருந்தார்கள். அதனைத்தனது ஆளுமைக்குள் கொண்டு வர விநோதன் எதிர்ப்புக்களையெல்லாம் மீறி பல சிங்கள மாணவர்களையும் அங்கத்தினர்களாக சேர்த்து தேர்தலில் வெற்றி பெற்றார். அதில் முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒருவர். வாக்களிக்க வந்தபோது தனது பெயரையே



தர்மலிங்கம்

தமிழில் தேடிக்கண்டு பிடிக்க முடியாது தடுமாறினார். அப்பொழுது அது நகைச் சுவையாகப் பேசப்பட்டது.

விநோதன் நல்ல பண்பானவர். நான் அவரையும் மனைவி குடும்பத்தாரையும் நன்கு அறிந்திருந்து அவர் வாங்கிய தர்மஅடிகளுக்காகவும்தனது உயிரையே இழந்ததிலும் மன வேதனைப்பட்டிருக்கிறேன். தமிழ் மக்களின் விமோசனத்துக்காக இதுவும் ஒரு கூட்டுறவுதான். சிங்கள பேரினவாதத்தின் தலைவர்களாகப் பின் வலம் வந்த மஹிந்த அப்பொழுதிருந்தே உள்ளீடு செய்து, தனது திட்டங்களுக்கு எந்த விதமான மனக்கிலேசமும் இல்லாமல் குண்டூசிகளோ ஆணிகளோ அடித்தார். எங்களில் எவருக்கும் இப்படி தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து அவரது ஆளை வெற்றியீட்ட வைக்கக் கூச்சங்கள் இருக்கும். ஆனால் மஹிந்த அதையும் செய்தார். அதுதான் மஹிந்த.

**696.இப்படியான கூட்டுறவுகள் நன்மை தந்தனவா?**

மஹிந்தா எப்படி அப்பொழுதே உட்புகுந்து தேசிய மூச்சில் இயங்கிய வேளையில் ஆணிகள் அடித்தாரோ, அப்படியிருந்தும் இப்படியாகப் பல கூட்டுறவுகள் தமிழ்மக்களின் நன்மைக்காக என பெரும்பான்மைக் கட்சிகளுடன் ஏற்படுத்தப்பட்டன.

அல்பிரட் துரையப்பா, குமாரசூரியர், தேவநாயகம், கனகரத்தினம், இராஜதுரை, கதிர்மாமர், அங்கஜன் எனப் பலரை பொதுமக்கள் தளத்திலிருந்தும், டக்ளஸ், கருணா, பிள்ளையான் என மேலும் பலரை ஆயுதப் போராளிகள் தளத்திலிருந்தும் பார்க்கலாம். இவர்கள் இணைப்புப் பாலங்களாக தமிழ் மக்களின் உரிமைகளின் அடிப்படைகளில் இப்படியான கூட்டுறவுகளை வைத்தார்களா, அன்றில் பேரினவாதக் கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்காக - அவற்றின் சலுகைகளுக்காக - அவர்களுக்கு ஒத்து ஊதித் தனி மனித நலன்களுக்காக - இந்தக் கூட்டுறவுகளை ஏற்படுத்திக் கொண்டார்களா என்பவை எப்பொழுதும் கேள்விக்குறியாகவே இருந்தன. அவை சமூக ஆய்வாளர்களின் பார்வைக்கு உரியவை. பொதுத் தளங்களில் தமிழ் மக்களது உரிமைகள் என்பதில் இந்த கூட்டுறவுகள் எவ்வித நன்மைகளையும் பெற்றுத்தரவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் ஜே.ஆருடன் 1977 இல் தேர்தலின் பின் நேசமாகக் கூட்டுறவில்தான் இயங்கினார்கள். நல்லாட்சிக் காலத்தில் கூட்டமைப்பும் அப்படியான கூட்டுறவில் தான் இருந்தார்கள். ஆனால் குணாதிசயங்களுக்காகவும் சில சம்பவங்களை அறிந்து புரிந்து கொள்ள வேண்டும்.

**697.குணாதிசயங்களை எடுத்துக் காட்டிய சம்பவங்கள் எவை?**

இவை பல. விவரித்துக் கொண்டு போனால் அது நூலாகி விடும். பதத்திற்காக ஒன்றிரண்டைச் சொல்கிறேன்.

ஆனால் இவை எல்லாமே அன்று தொட்டு தமிழ் மக்களிடையே ஓர் இணக்க சுபாவம், தங்களைப் பற்றிய செயல்பாடுகளிலே கூட இல்லாது, ஏகோபித்த தலைமை தாங்க வேண்டும் என்ற மனோபாவத்தை அது வளர்த்தது. இந்த ஏகோபித்த தலைமை என்ற குணாதிசயம் அவர்களை அழித்ததையும் காணலாம். இந்தியப் படைகள் வெளியேறிய பின்பும் நடந்ததும் அதுதான்.

கஜேந்திரகுமாரின் பாட்டனார் ஜீ.ஜீ. பொன்னம்பலம், புகழோடு ஆளுமையில் இருந்த நாள்களில் தனது அகங்காரத்தில், தான் தமிழர்களின் தலைவனாக இருக்க வேண்டிய இடம் யாழ்ப்பாணம்தான் என்று கணக்கெடுத்தார். அது அரசியல் தொகுதியேயொழிய அவர் தொடர்ந்து அங்கு குடியிருந்தவரல்லர். அப்பொழுது யாழ்ப்பாணத்தின் பிரதிநிதியாக அருணாசலத்தின் வாரிசான மகாதேவாதான் இருந்தார். அவரைத் தோற்கடித்து, மகாதேவாவை அரசியலில் இருந்து ஒதுக்குவேன், எப்படி ஓர் உறையில் இரண்டு வாள்கள் இருக்கமுடியாதோ, அதுபோல தமிழினத்துக்கு இரண்டு தலைவர்கள் இருக்கக் கூடாது என்பது அவரது வாதமாக இருந்தது. ஜீ.ஜீ.அகங்காரம் கொண்டவர் மட்டுமல்லர், மற்றவர்களுடன் சகஜமாகப் பழகுவதிலும் மட்டுப்பட்ட வராகவும் நகைச்சுவை உணர்வுகள் குறைந்தவராகவும் காணப்பட்டார். எனினும் தனது ஆளுமையால் ‘பொன்னம்பலம் எங்கள் பலம்’, ‘போடு புள்ளடி சைக்கிளுக்கே!’ என்ற சுவரொட்டிகளும், கொடிகள் பறந்த சைக்கிள் பவனிகளும், அந்தப் பவனிகள் மகாதேவாவின் பிரச்சார கூட்டத்திலிருந்து தொடங்குவதும் முடிவதும் அவரது பிரச்சாரங்களுக்கு



சித்தார்த்தன்

மெருகு சேர்த்து, ஜீ.ஜீ. வெற்றியீட்டி, யாழ்ப்பாணத்தின் பிரதிநிதியானார். பின்னாளில் மகாதேவாவை டி.எஸ்.சேனாநாயக்கா தங்களது அமைச்சரவையில் இணைத்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக்கினார். அவ்வாறாக தமிழ்மக்கள் அரசியலில் ஒரு வாள் உறைக்கு போக, மறு வாள் உறங்காது இன்னுமொரு உறையைத் தேடியதுதான் நடப்பது; நடந்தது.

பின்னாளில் ஜீ.ஜீயின் மகன் குமார் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயல்படாமல் அவர்கள் குப்பை அரசியல் நடத்துகிறார்கள் என அகங்காரப் பேச்சுக்களும், ஏச்சுக்களும் நடத்தினாலும், பணிவானவராகவும் அன்புடன் உறவாடுவதிலும் நகைச்சுவை உணர்வுகள் மிகுந்தவராகவும் காணப்பட்டார். அவரது மகன் கஜேந்திரகுமார் தந்தையைப் போலாவாரா? பாட்டனைப் போலாவாரா?

ஏகோபித்த தலைமை என்பது பல துன்பியலான சம்பவங்களுக்கு வழி வகுத்தது. பின்னால் நடத்தப்பட்ட ஏதேச் சாதிகாரங்களுக்கும் சகோதரப் படுகொலைகளுக்கும் முன்னோடியாக இருந்த ஒன்றிரண்டு சம்பவங்கள் எப்படி தார்மீகத்தையும் தர்மத்தையும் மறந்து வளர்ந்த குணாதிசயங்களைச் சொல்லுகின்றன. அவைகள் துன்பியலானவை. அவற்றைப் பார்ப்போம்.

1976, 1977 காலங்களில் கொழும்பில் பல பகுதிகளில் முக்கியமாக வெள்ள



ஜீ.ஜீ.

வத்தை, பம்பலப்பிட்டிய போன்று தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் கூட்டணியின் கொழும்க் கிளை அங்கத்தவர்களும், இளைஞர் பேரவை உறுப்பினர்களும் சேர்ந்து சிறையில் இருக்கும் இளைஞர்களுக்கு நிதி சேகரித்து மாதா மாதம் அவர்களின் வீடுகளில் கொண்டு சென்று வழங்கினர் என்று அறிந்திருந்தேன் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினரோடு (TRRO) இணைந்து இயங்கிய உமா மகேஸ்வரன் இந்த நிதிகளைப் பொறுப்பாக நிர்வகித்து, அதனை உடுவில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்திடம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் பணியை ஒப்பித்திருந்தார். சிறையிலிருந்த இளைஞர்கள் ஒவ்வொருவர் வீட்டிற்கும், தர்மலிங்கம் நேராகவோ, மற்ற இளைஞர்களின் துணையுடனோ சென்று பணத்தை தந்து, அவர்களுக்கு ஆறுதலும் சொல்லி வருவதும் வழமை. அதில் பின்னாளில் குட்டி மணி, தங்கத்துரை போன்ற முன்னோடிப் பேராளிகள் குடும்பமும் அடங்கின. இந்த நிதி குறைந்தபோது தர்மலிங்



மகாதேவா

கம் தனது குடும்பத்தினரிமும், உமா மகேஸ்வரன் TRRO வில் இருந்து நன்கொடையாகப் பெற்றும் அந்த உதவிகளைத் தொடர்ந்தனர்.

1980ஆம் ஆண்டு காலப்பகுதிகளில், விடுதலை போராளிகள், தமிழர் கூட்டணித் தலைவர்களை மிதவாதிகளாகப் பார்த்து, அவர்கள் தலைமைகளிலிருந்து விலகி, அதனைத் தாங்கள் பொறுப்பேற்க வேண்டும் என கண்டிமைப்படுத்தினர். இந்த நிர்ப்பந்தங்களிடையே கூட்டணி தலைவர்கள் மாவட்ட சபை தேர்தல் பிரச்சாரங்களுக்காக பாத யாத்திரை நடத்தினர். இது வல்வைக்கு வந்த பொழுது, இளைஞர்களால் தர்மலிங்கத்தின் ஜீப் வண்டி கொளுத்தப்பட்டது. அதனை முன்னின்று செய்தவர் பின்னாளில், விடுதலை புலிகளில் முதல் களப்பலியான புலி சங்கர். அதற்காக அவர்களை கூட்டி வந்திருந்தவர் கேணல் கிட்டு. ஜீப் எரிக்கப்பட்ட சம்பவம் நடந்தது 16 மார்ச் 1981 இல். இளைஞர்களுக்காக அவ்வளவு உதவிகள் செய்த தர்மலிங்கத்துக்கு இப்படிச் செய்திருக்கக் கூடாது, அதுவும் தங்களது ஊரில் நடத்திருக்கக் கூடாது என குட்டிமணி, தங்கத்துரை போன்றோர் வருந்தினர். ஆனால் பின்னர், அந்த அதர்மத்துக்காக வருந்திய குட்டிமணி, தங்கத்துரையின் விடுதலை குழுவில் இருந்தவர்களின் உத்தரவுகளிலேயே தர்மலிங்கம் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். அந்த தர்மவானுக்கு எதிராக தனிப்பட்ட குற்றச்சாட்டுக்கள், துரோகி என்று வசை பாடல்கள் இல்லை. ஏனென்று தெரியாது. ஏதோ செய்ய வேண்டும் எனச் செய்த கொலைக்களாக இவை முடிந்தன.

விடுதலை போராட்ட காலங்களின் கோலங்களால், தர்மலிங்கத்தின் மகன் சித்தார்த்தன் பின் புளொட் இயக்கத்தில் சேர்ந்து, தற்சமயம் அதன் தலைவராக, பொறுப்பிலிருக்கிறார்.

இவற்றைப் பற்றியும், அவர்களது உட்கொலைகள், சக பேராளிகளின் கொலைகள் பற்றியும் பேசிய போது விடுதலைக் குழுக்களைச் சேர்ந்தோர் வரம்புகள் மீறி, அதீதமான ஆர்வங்களினால் பல தவறுகள் செய்து விட்டார்கள், அவற்றையொட்டி மனம் வருந்துகிறேன் என ஆதங்கப்பட்டார்.

(வளரும்)

# நுட்பியல் அவத்தை





ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் –
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**இந்தியாவின் சிறந்த பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் கோவிட் தொற்றுக்காரணமாக மரணமடைந்த செய்தி நேற்று பரவத்தொடங்கியதும் பலர் அவர்க்கு அஞ்சலி செலுத்திவருகிறார்கள். குறிப்பாக, இந்திய ஜனாதிபதி பிரதமர் மற்றும் பலபிரபலங்கள் ட்விட்டர் சமூகவலைத்தளம் மூலம் அஞ்சலி செலுத்திவருகின்றனர். இந்தச்சந்தர்ப்பத்தில் ட்விட்டர் பக்கத்தில் #லதாமங்கேஷ்கர் என்ற சொல் ட்ரெண்டிங் ஆகியிருக்கிறது. அதுவும் குறிப்பாக இந்தியாவின் எதிரிநாடான பாகிஸ்தானில் #லதாமங்கேஷ்கர் என்ற சொல் ரென்டாகியிருப்பது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்தச்சந்தர்ப்பத்தில் ட்விட்டர் என்ற நுட்பியல் அவத்தை பற்றியும் ட்விட் ட்ரெண்டிங் என்பது பற்றியும் பார்க்கலாம்.**

ட்விட்டர் என்பது ஒரு ஒன்லைன் செய்தி மற்றும் சமூக வலைப்பின்னல் தளமாகும், அங்கு மக்கள் ட்வீட்ஸ் எனப்படும் குறுகிய செய்திகளில் தொடர்பு கொள்கிறார்கள். ஒருவருக்கு பயனுள்ளதாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் குறுஞ்செய்திகளை இடுகையிடுவது ட்வீட்டிங் ஆகும். ஒருவர் தனது ஈ.மெயில் மூலம் ட்விட்டர் கணக்கை ஆரம்பிக்கமுடியும். ஒருவரை பின்தொடர்ந்து அவரது செய்திகளை பார்வையிடமுடியும்.

ட்விட்டரில் 280 எழுத்துகள் அல்லது அதற்கும் குறைவாக இருக்கும் எழுத்துக்களில் ஒருதடவையில் செய்தியை வழங்கமுடியும். இந்த கட்டுப்பாடு மொழியின் கவனம் மற்றும் புத்திசாலித்தனமான பயன்பாட்டை ஊக்குவிக்கிறது, இது எழுதுவதற்கு சவாலானது. இந்த அளவு கட்டுப்பாடு ட்விட்டரை ஒரு பிரபலமான சமூக கருவியாக மாற்றியது.

ட்விட்டர் தகவல் வழங்குனராகவோ அல்லது பெறுநராகவோ பயன்படுத்த எளிதானது. ட்விட்டரில் இலவச




கணக்கொன்றை எளிமையாக தொடக்கமுடியும். தினசரி, மணித்தியாலங்களுக்கு விரும்பும் அளவுக்கு அடிக்கடி தகவல்களை (ட்வீட்) வழங்க முடியும். 280 அல்லது அதற்கும் குறைவான எழுத்துக்களைத் தட்டச்சு செய்து, ட்வீட் என்பதைக் கிளிக் செய்தால் தகவல் பகிரப்படும். இதில் முக்கியம் பெறும் சொற்களை # ஹேஷ்டேக் என்ற அடையாளத்துடன் பகிரமுடியும்.

மக்கள் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு நல்லதொரு மெய்நிகர் தளமாக இதனை பார்க்க முடியும். அதாவது ஒரு தகவலை உலகுக்கு உரக்கக் கூச்சலிட இது ஒரு வாய்ப்பு.

ஒரு ஹேஷ்டேக்கில் செயலுக்கான அழைப்பு இருக்கும்போது இது மிகவும் முக்கியமானதாகிறது, பிரபலமாக வாய்ப்புள்ளது. இதுவே டிரெண்டிங் ஆகும். இது ட்விட்டரின் அல்கோரிதம் படிப்படியான நிலையான வளர்ச்சியை ஆதரிப்பதன் மூலம் டிரெண்டிங் என்பதை தீர்மானிக்கிறது. ஒரு நாள் வளர்ச்சி டிரெண்டிங்கில் உள்ளது.

டிரெண்டிங் என்பது வெறும் சொற் தொகுதி அல்ல. ட்ரெண்டிங் ஆவதற்கு தனித்துவமான சொற்தொகுதியுடன் ஹேஷ்டேக்கைப் பயன்படுத்த வேண்டும்.

ஒரு பெயர், சொற்றொடர் அல்லது தலைப்பு அதிக விகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

மற்றவர்களை விட 'பிரபலமான தலைப்பு' அல்லது வெறுமனே 'போக்கு' (ட்ரெண்டிங்) என்று அழைக்கப்படுகிறது. அதாவது பிரபலமான தலைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்ட ஒன்றின் மூலம் பிரபலமாகின்றன. இது ஒரு குறிப்பிட்ட தலைப்பைப் பற்றி பேச மக்களைத் தூண்டும் நிகழ்வு

ஒரு சொற்றொடர் (ட்ரெண்ட்) பிரபலமாவதற்கு ஆறு விடயங்கள் கவனிக்கப்படுகிறன. லெக்சிகல் பகுப்பாய்வு, அடைய நேரம், போக்கு மறுநிகழ்வு, ட்ரெண்டிங் நேரம், ட்வீட் எண்ணிக்கை மற்றும் மொழி போன்றன வாகும்.

ஒரு சொற்றொடரின் ட்ரெண்ட் செய்யப்பட்ட ட்வீட்கள் அல்கோரிதம்கள் மற்றும் ஹ்யூமன் க்யூரேஷன் ஆகிய வற்றின் கலவையால் தீர்மானிக்கப்படும் என்றும், டிரெண்டிங் விவரங்கள் முழுவதுமாக மனிதர்களால் கையாளப்படும் என்றும் ட்விட்டர் கூறுகிறது. ஸ்பேம் அல்லது தவறான ட்வீட்கள் பிரபலமான தலைப்பில் பின் செய்யப்படுவதைத் தடுக்க அல்காரிதம்கள் பயன்படுத்தப்படும்.

இருப்பினும் தவறான தகவலைப் பரப்புவதற்கு உதவியதற்காக இந்தச் சேவையின் ட்ரெண்டிங் பிரிவும் அடிக்கடி விமர்சனத்துக்குள்ளானது. ஏனெனில் ட்விட்டரில் தலைப்புகளை ட்ரெண்டாகப் பெறுவது, ஒன்லைனில் ஒரு செய்தி பரவுவதற்கு உதவும் என்பதாலாகும்.

**ஹேஷ்டேக்கின் நோக்கம்**

ட்விட்டரில் ஹேஷ்டேக் ஒரு எளிமையான யோசனையாகத் தொடங்கியது: ட்வீட்டர் ஒரு வார்த்தை அல்லது ஒரு வார்த்தைக் குழுவிற்கு முன்னால் # (ஹேஷ்டேக்)சின்னத்தை சேர்க்கிறது, இதில் சொற்களுக்கிடையில் இடைவெளிகள் இல்லை. அவ்வாறு செய்வதன் மூலம் ட்வீட்டை வகைப்படுத்தவும், அதே ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி ட்வீட் செய்த மற்றவர்களுடன் குழுவாக இணையமுடியும். ஹேஷ்டேக் ஒரு முக்கிய குறிச்சொல்லாகும். இது இலகுவாக அடையாளப்படுத்த மற்றும் புரிந்துகொள்வது எளிது. ஒரு குறிப்பிட்ட ஹேஷ்டேக் அடிப்படையாகக் கொண்டு தேடுபவர்கள் குறிப்பிட்ட குறிச்சொல்லைப் பயன்படுத்தி ட்வீட்களின் பட்டியலைப் பெறுவார்கள். தேடுபவர் இலகுவாகவும் விரைவாகவும் குறித்த இடத்தை அடையமுடியும்.

ட்வீட்களில் சரியான ஹேஷ்டேக் சேர்க்கப்படும்போது, ரீட்வீட் விகிதங்கள் உயரும் அதாவது மற்றவர்கள் அசல் ட்வீட்களை மறுபதிவு செய்கிறார்கள் என்று அர்த்தப்படும். இது ஒரு கருத்தை புதிய பார்வைகள் மற்றும் கருத்துகளுக்குத் திறக்கிறது, எனவே வளர்ச்சி மற்றும் தெரிவுநிலையின் சுழற்சி தொடர்கிறது.

ட்விட்டர் தினசரி 350 பில்லியன்+ ட்வீட்களை செயலாக்குகிறது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு ஹேஷ்டேக்கை உருவாக்குவதற்கான கவனிக்க வேண்டியவற்றைப் பார்க்கலாம். உரையாடலைத் தூண்டுகிறதா? என்பதை முதலில் பார்க்க வேண்டும். அதற்கு தெளிவான நோக்கம் இருக்க வேண்டும்.




அதனால் மக்கள் எதைப் பெறுவார்கள். ஒரு ஹேஷ்டேக் நோக்கத்திற்கும் விடயத்திற்கும் பொருத் தமானதாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட மற்றும் தனித்துவமானதாக இருக்க வேண்டும்.

தேர்ந்தெடுத்த ஹேஷ்டேக் ஏற்கனவே பயன்பாட்டில் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். வேறொரு, மற்றொரு அர்த்தத்தை ஹேஷ்டேக் தரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இங்கு ஒரு ஹேஷ்டேக் வெற்றி பெறுவதென்பது உண்மையான மக்களுடன் பேசும் உண்மையான நேரடி நபர் என்ற எண்ணத்தில் பகிரப்படும் சொற்றொடர்களே பிரபலமாகின்றன. அந்த அடிப்படையில் தான் தற்போது #லதாமங்கேஷ்கர் ஹேஷ்டேக் பிரபலமாகி (ரெண்டிங்) ஆகிவருகின்றது எனலாம்.



காலைக்கதிர் Kalaikkathir

# பொறிக்குள் சிக்கிவிட்டோம் இவர்கள் கூறுகின்றமை பொய்!

## உண்மையைப் போட்டுடைத்தார் கம்மன்பில

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் கொவிட் தொற்று நோய் என அரசாங்கத்தில் இருக்கும் பலர் கூறுகின்றமை பொய் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். சிங்கள வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.**



இலங்கை வரலாற்றில் என்றுமே எதிர்நோக்காத நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. பலர் இந்த நெருக்கடியை அடையாளம் காணவில்லை. நெருக்கடியை அடையாளம் காணாது அதற்குத் தீர்வு காண முடியாது.

கொவிட் காரணமாக ஏற்பட்ட நெருக்கடி எனப் பலர் கூறுகின்றனர். இது உலக நெருக்கடி என்கின்றனர். இது பொய். இலங்கைவரையறைகள் இன்றிக் கடனை பெற்றதே இந்த நெருக்கடிக்குக் காரணம். கடன் பொருளாதாரம்.

நாம் வரலாறு முழுவதும் கடனைப் பெற்று செலவிட்ட இனம். உழைத்து செலவிடுவதற்குப் பதிலாகக் கடனைப் பெற்று செலவிடும் கலாசாரத்தை நாம் 1950 ஆம் ஆண்டில் இருந்து முன்னெடுத்து வருகின்றோம்.

தற்போது மேலதிக கடனைப் பெற முடியாத அளவுக்கு கடன் பொறியில் சிக்கியுள்ளோம். இந்த நெருக்கடி முழு நாட்டு மக்களும் சிக்கியுள்ளனர். இதனால், அதிகமாகப் பயிரிடுங்கள். உருவாக்கங்களுக்கான உந்துலை ஏற்படுத்த வேண்டும்.

இந்த முன்னுதாரணத்தை பேச்சில் அல்ல அரசியல் தலைவர்கள் செயலில் காட்ட வேண்டும். பெருந்தொகையான எரிபொருளை விரயமாக்கிசுதந்திர தினவைபவம் போன்ற அரச நிகழ்வுகளை நடத்துகின்றமை தவறு. அப்படியான வைபவங்களை நடத்த வேண்டாம் என நான் அமைச்சரவையில் கோரினேன்.

எனினும் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்க அச்சகத்தில் கடதாசிக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, பெப். 07

அரச அச்சகத்தில் அரச புத்தகங்கள் உள்ளிட்ட அச்சிடும் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் கடதாசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சக திணைக்களத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அச்சு கடதாசிகள் அடங்கிய 8 கொள்கலன்கள் டொலர் கிடைக்காத காரணத்தால் கொழும்பு துறைமுகத்தில் சில காலமாகத் தேங்கியுள்ளமையால் இவ்வாறு கடதாசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அரசாங்கத்தின் அச்சிடும் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது 6 மாதங்களுக்குர் போதுமான அச்சுக் கடதாசிகள் மட்டுமே அரச அச்சகத் திணைக்களத்திடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் அச்சிடும் பணிகளில் பெரும் சிக்கல் நிலை உருவாக வாய்ப்புள்ளதாகவும் குறித்த திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர்.

# கூட்டுப் பொறுப்புணர்வு அரசுக்குக் கிடையாது!

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

இந்த அரசாங்கத்திற்கு கூட்டுப் பொறுப்பு என்பது கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

எரிசக்தி அமைச்சரால் எரிபொருள் விநியோகம் செய்ய முடியவில்லை, அவர் மின்வலு அமைச்சரை குறை சொல்கின்றார்.

மின்வலு அமைச்சரால் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க முடியவில்லை, அவர் எரிசக்தி அமைச்சரைக் குற்றம் சுமத்துகின்றார்.

எனினும், இந்த இருவரினாலும் தங்களது பணிகளை சரியாக செய்து கொள்ள முடியவில்லை.

இது சரியாக நாயின் வேலையை கழுதை செய்வதாகவும் கழுதையின் வேலையை நாய் செய்வதாகவும் கருத வேண்டுமென திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

### கச்சதீவுத் திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் ஆலோசனையின்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலை பேசியில் உரையாடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என அவரின்ஆமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், கச்சதீவுத் திருவிழாவில் இந்திய யாத்திரிகர்களையும் அனுமதிக்குமாறு இந்தியத் தரப்பில் இருந்து இரு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்திய யாத்திரிகர்கள் 200பேரை அல்லது குறைந்த பட்சம் 100பேரையேனும் அனுமதிக்குமாறே இந்தக் கோரிக்கைகள் யாழ். மாவட்டச் செயலகத்திடமும் மற்றும் யாழ் மறைமாவட்ட ஆயரிடமும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம் மறை மாவட்ட ஆயர் தேவசகாயம் மற்றும் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஆகிய தரப்புகளே மேற்படி கோரிக்கைகளை எழுத்தில் வழங்கியுள்ளன.

இவ்வாறு கிடைத்த இரு கோரிக்கைகளையுன் தற்போது சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கொண்டு சென்றுள்ளார்.

### புதுடெல்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரிந்தம் பாக்சி வரவேற்றுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை வரை டெல்லியில் தங்கியிருக்கும் ஜீ.எல்.பீரிஸ், பிரதமர் நரேந்திர மோடி, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் எனக் கூறப்பட்டது.

### குருந்தூர்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர்கள் பிரித்ஓதல் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர் என் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குமுளமுனை – தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலைக்கு நேற்று முன்தினம் இரவு வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜனசுமன ஆகியோர் 40 இற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகளுடன் இணைந்து திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது,ஹெப்பிற்றிகொல்லாவ, புல்மோட்டை அரிசிமலை,மணலாறு பகுதிகளிலிருந்து வருகை தந்த 40 இற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் தொல்லியல் அகழ்வு இடம்பெற்றுவரும் இடத்தில் அமைக்கப்பட்டு வரும் விகாரையில் பிரித்ஓதல் மேற்கொண்டு அமைச்சர்களோடு இணைந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

### யாழ்.பல்கலையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### ஜெனிவாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனால் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அரசாங்கம் புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பயன்படுத்தி ஒழிக்கும்போது, அதனைத் தடுக்க முடியாத நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயயாது போகும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், தோற்கடிக்கப்பட்டாலும் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

அவ்விதமான விடயத்தை குறிப்பிடாது கடிதமொன்றை அனுப்புவது பயனற்றதாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### எரிபொருள் விலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லங்கா ஐ.ஓ.ஸி நிறுவனம் அறிவித்துள்ளது.

177 ரூபாவாக காணப்பட்ட ஒரு லீற்றர் 92 ரக பெற்றோலின் புதிய விலை 184 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

மேலும், 121 ரூபாவாக காணப்பட்ட ஒரு லீற்றர் டீஸலின் புதிய விலையாக 124 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### இம்முறையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது

குறிப்பாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரிடமும் கையொப்பத்தைப் பெறுவது பற்றி பேச்சுக்கள் முன்னெடுக்கப்படப் போகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி தமிழரசுக்கட்சி கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளினதும் சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஏற்கனவே ஒரு கடிதத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் 48 நாடுகளினதும் ஜெனிவா தூதரகத்துக்கு அனுப்பி வைத்துவிட்டார் என்பது தெரிந்ததே.

### தமிழர் தரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்டவர்கள் கையொப்பமிட்டு அனுப்பி வைத்த கடிதத்தின் தொடர்ச்சியாக அண்மைக்கால விடயங்களை மையப்படுத்திய கடிதமொன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதனைவிட, வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் சிவில் சமூகங்களின் சார்பில் கடிதமொன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது. இதற்கான தயாரிப்பு பணிகளுக்கான கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக மெய்நிகரில் இடம்பெற்று வருகின்றன.

இதற்கு அடுத்தபடியாக, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டசங்களின் சார்பில் பிறிதொரு கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அதேநேரம், சிவில் தரப்பிடமிருந்தும் பிறிதொரு கடிதம் ஜெனிவாவுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன எனக் கூறப்படுகின்றது. ஆனால் அப்பணியில் ஈடுபடப்போகும் அமைப்புக்கள் மற்றும் பெயர் வவரங்கள் தற்போது வரையில் வெளியிடப்படவில்லை.

காலைக்கதிர்
Kalaikkathir

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வங்குரோத்து நிலைமையில்!

இலங்கை மின்சார சபை உட்பட பல அரச நிறுவனங்கள் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தாத காரணத்தால், கூட்டுத்தாபனம் வங்குரோத்து அடைந்து விட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பந்துல சமன் குமார தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து அடைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை எதிர்காலத்தில் தனியாருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தால்,அதற்கு எதிராக மிகப்பெரிய தொழிற்சங்க போராட்டத்தில் இறங்க போவதாகவும் அவர் கூறியுள்ளார். இணையத்தள வலையொளி தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் அமைச்சரவை பத்திரத்திற்கு அனுமதி வழங்கி, இலங்கை மின்சார சபைக்கு எரிபொருளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வங்குரோத்து அடைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை வழமை நிலைமைக்கு கொண்டு வர வேண்டுமாயின் ஒரு லீற்றர் டீசலின் விலையை 25 ரூபாவிலும் பெற்றோலை 18 ரூபாவிலும் அதிகரிக்க வேண்டும்.

அத்துடன் மண்எண்ணெய் லீற்றர் ஒன்றின் விலையை 40 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்.

50 கோடி டொலருக்கு இந்தியாவின் மூன்று நிறுவனங்களிடம் அரசாங்கம் எரிபொருளைக் கொள்வனவு செய்வதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகும் எனவும் பந்துல சமன் குமார குறிப்பிட்டுள்ளார்.

# ஊழல்வாதி அல்லர் ரஞ்சன் அவர் ஓர் அரசியல் கைதி!



## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

ரஞ்சன் ராமநாயக்க ஊழலில் ஈடுபட்டு, மக்களின் பணத்தை தவறாக பயன்படுத்திய குற்றத்துக்காக சிறையில் தண்டனை அனுபவிக்கவில்லை எனவும் அரசியல் கைதியாக அவர் சிறையில் இருக்கிறார் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி ஏன் பொது மன்னிப்பை வழங்காமல் இருக்கின்றார் என்ற கேள்வி எழுகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் நலன் அறியும் நோக்கில் வெலிகடை சிறைச்சாலைக்குவிஜயம்செய்த ரஹ்மான், அங்கு செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே இதனைக் கூறியுள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்படுவார் என சமூக ஊடகங்களிலும் நாட்டிலும் அதிகளவில் பேசப்பட்டது.

இறுதியில் அவருக்கு பொது மன்னிப்புக் கிடைக்கவில்லை.

ஜனாதிபதி ஏன் பொது மன்னிப்பை ரஞ்சனுக்கு வழங்கவில்லை என்பது எமக்குத் தெரியாது. குற்றங்கள், பண மோசடிகள், ஊழல்கள் மற்றும் வன்புணர்வு குற்றச்சாட்டுகள் காரணமாக ரஞ்சன் சிறையில் அடைக்கப்படவில்லை.

வெளியிட்ட கருத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக அவருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அநீதிக்கு எதிராக நியாயத்துக்காகத் தொடர்ந்தும் போராடியவர் ரஞ்சன் ராமநாயக்க.

ஏனையோருக்கு பொது மன்னிப்பை வழங்க முடியுமாக இருந்தால், ஏன் அவருக்கு வழங்கக் கூடாது. அவர் சிறையில் அடைக்கப்பட்டு ஓராண்டும் கடந்துள்ளது.

இதனால், ஜனாதிபதி அவருக்கு பொது மன்னிப்பை வழங்கி இருக்கலாம். அதற்கான அக்கறை ஜனாதிபதிக்கு இல்லை என்பது எமக்குத் தெரிகிறது.

ரஞ்சன் ராமநாயக்க அரசியல் கைதியாக சிறையில் இருக்கின்றார். ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காகவும் அவரது மனித உரிமைகளுக்காகவும் தொடர்ந்தும் செயற்பாடுகளை முன்னெடுப்போம் எனவும் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்

# நாணய நிதியத்துக்குச் சென்றாவது அரசு ஒழுக்கத்தை கற்கவேண்டும்!

## அதன் எம்.பி. சந்திம வீரக்கொடி ஆலோசனை



நாட்டில் ஒழுக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றாவது ஒழுக்கமாக மாற வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இதுவரை நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் ஒழுக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போதைய அரசாங்கமும் அதனை செய்யாது என்பதை புரிந்துக் கொள்ளவேண்டும்.

இதனால், சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றாவது ஒழுக்கமாக மாறி நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல வேண்டும். மது பழக்கத்திற்கு அடிமையாகி அதில் இருந்து விடுப்பட முடியா மல் போனல், புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்புவார்கள்.

ஹெரோயின் பழக்கத்தில் இருந்து விடுப்பட முடியாதவர்களை அதில் இருந்து மீட்க கந்தகாடு புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவார்கள்.

இதுபோல் எமது அரசுகளுக்கு இதுவரை ஒழுக்கத்தை ஏற்படுத்தும் கடமையை செய்ய முடியாது போயுள்ளது என்பது தெளிவாகியுள்ளது எனவும் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டுள்ளார்.




# அமெரிக்காவில் தமிழுக்கு கிடைத்த உயர் அங்கீகாரம்!

அமெரிக்காவின் தமிழுக்கு உயர் அங்கீகாரம் கிடைத்துள்ள செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இதன்படி அமெரிக்காவில் முதல் முறையாக வீதி ஒன்றுக்கு திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட இருக்கிறது.

உலக பொதுமறையான திருக்குறளை எழுதிய திருவள்ளுவரை சிறப்பிக்கும் வகையில், தமிழகத்தில் பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள், வீதிகளுக்கு திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்தியாவை கடந்து, அமெரிக்காவில் முதல் தடவையாக வீதி ஒன்றுக்கு திருவள்ளுவரின் பெயர் சூட்டப்படவுள்ளது.அமெரிக்காவின் வேர்ஜினியா மாகாணத்தில் உள்ள பேர்பேக்ஸ் பகுதியில் இந்த வீதி அமைந்துள்ளது.

இது, ஆங்கிலத்தில் "Valluvar Way' என்றும் தமிழில் 'வள்ளுவர் தெரு' என்றும் அழைக்கப்படும் என்று வேர்ஜினியா சபை பிரதிநிதி டொன் ஹெல்மர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.



# ஜே.வி.பி. அரசமைக்குமானால் 10 லட்சம் டொலர்களை கடனாக வழங்க இணங்கினார் கனேடிய இலங்கையர்!

## சுனில் ஹந்துன்நெத்தி தகவல்

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் ஆட்சியமைக்கும் அரசாங்கத்துக்கு 10 லட்சம் டொலர்களை கனடாவில் வசிக்கும் இலங்கையர் வழங்குவதாக உறுதியளித்துள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்படும் டொலரை நான்கு வருடங்கள் வரை திருப்பி செலுத்தத் தேவையில்லை. நான்கு வருடங்களின் பின்னர் திரும்ப செலுத்தும்போது வட்டி எதிர்பார்க்கப்பட மாட்டாது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான அரசாங்கத்துக்கு இவ்விதமாக டொலர்களை வழங்கி உதவி செய்ய உலகம் முழுவதும் பல இலங்கையர்கள் இருக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால், வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் ஊடாக நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளப் போவதாகவும் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மாத்தறை மாவட்ட மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி நாட்டில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால், அந்த அரசாங்கத்தின் நிதியமைச்சர் பொறுப்பு சுனில் ஹந்துன்நெத்திக்கு வழங்கப்படும் என அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஒரு கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டிருந்தார்.

# சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதில் பிரச்சினை எதுவுமில்லை; நிபந்தனைகளே முக்கியம்

## என்கிறார் வீரவன்ஸ



சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு பேச்சு நடத்துவது எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தப்படும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியமாக இருக்கலாம். சர்வதேச அமைப்புகளாக இருக்கலாம். அவற்றுடன் பேச்சு நடத்துவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. ஆனால், மேற்படி தரப்புகளால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளே முக்கியம்.

அவை நாட்டுக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது பற்றி ஆராய வேண்டும். இறுதியில் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படாத தேர்வையே நாம் நாட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.